தரம் 6

# இரண்டாம் மொழி தமிழ்

## ஆசிரியர் வழிகாட்டி

(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.)

தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீ லங்கா

இணையத்தளம்: www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk

# இரண்டாம் மொழி

# தமிழ்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 6

**(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**


தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

# இரண்டாம் மொழி

# தமிழ்

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 6

**(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**


தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

இரண்டாம் மொழி - தமிழ்
ஆசிரியர் வழிகாட்டி
தரம் - 6

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN .............................

முதலாம் பதிப்பு : 2015
தேசிய கல்வி நிறுவகம்

தமிழ்மொழித் துறை,
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
ஸ்ரீலங்கா.

இணையத்தளம் **: www.nie.lk**
மின்னஞ்சல் **: info@nie.lk**

பதிப்பு:
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின்போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்துப் பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு மற்றும் பாடநூல்கள் என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

# அறிமுகம்

பல்லின, பன்மொழிப் பண்பாட்டுச் சூழலில் வாழும் மக்கள் தமக்கிடையே புரிந்துணர்வு, ஐக்கியம் என்பவற்றை வளர்த்துக் கொள்ளவும் பரந்த அறிவு, மனப்பாங்கு என்பவற்றை ஏற்படுத்திக் கொள்ளவும் மாற்றுச் சமூகங்களின் மொழிகளை அறிந்திருத்தல் பயன் மிக்கதாகும். இலங்கையைப் பொறுத்தவரையில் சிங்களமொழி பேசும் சமூகத்தவர் தமிழ் மொழியையும் தமிழ்மொழி பேசும் சமூகத்தவர் சிங்கள மொழியையும் கற்பது இரு சமூகங்களிடையிலும் புரிந்துணர்வையும் உறவையும் ஏற்படுத்த வழி செய்யும் பயன்மிக்க நடவடிக்கையாகும்.

அவ்வகையில் முதன்மொழியாகிய தாய்மொழி (சிங்களம் / தமிழ்), சர்வதேச மொழியாகிய ஆங்கிலம் என்பவற்றுடன் இரண்டாம் மொழியையும் (தமிழ் / சிங்களம்) கற்றல் - கற்பித்தல் அவசியம் என்பது தேசிய கல்விக் கொள்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட தரம் - 6 க்கான “ இரண்டாம் மொழி - தமிழ்” பாடம் 2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

மேலும், இப்பாடத்தில் மொழித்திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்பவற்றில் தரம் - 6 மாணவர்கள் அடைய வேண்டிய தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு, அவற்றுக்கான தேர்ச்சி மட்டங்கள் படிமுறைப்படுத்தித் தரப்பட்டுள்ளன. ஆசிரியர், தேர்ச்சி மட்டங்களின் படிமுறை வளர்ச்சியைக் கருத்திற் கொண்டும் பொருத்தமான கற்பித்தல் உத்திகளைக் கையாண்டும் தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும். அத்தோடு தாம் கற்பிக்கும் வகுப்புக்கு முற்பட்ட வகுப்புகளின் பாட விடயம் பற்றி அறிந்திருக்க வேண்டும். அது மட்டுமின்றி, ஒவ்வொரு வகுப்புக்கும் கற்பிக்கும்போதும் முன்னைய வகுப்புப் பாட விடயங்களுடன் தொடர்புபட்ட விடயங்களை மீட்டுப் பார்ப்பதும் அவசியமாகும்.

அதற்கமைய “ இரண்டாம் மொழி - தமிழ்” பாடத்தின் குறிக்கோள்களை நிறைவு செய்தவாறு தேர்ச்சிமிக்க இளஞ் சந்ததியினரை உருவாக்குவதற்கு வழிகாட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும். இந்நூல் தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**பணிப்பாளர்**
**தமிழ்மொழித்துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் அனுமதியும் :**

கல்விசார் அலுவல்கள் சபை,
தேசிய கல்வி நிறுவகம்

**பாட விடய ஆலோசனை :**

பேராசிரியர் செ. யோகராஜா
மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்
கலாநிதி. ஸ்ரீ. பிரசாந்தன்
சிரேஷ்ட விரிவுரையாளர், ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
கலாநிதி உ. நவரத்னம்
நிபுணத்துவ ஆலோசகர், ஜி.ஐ.இஸட் (GIZ)
வ. விஜயலெட்சுமி
பணிப்பாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்

**இணைப்பாக்கம் :**

திருமதி நா. சீதரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்
திரு. மு. தயாநிதி
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்

**வளப் பங்களிப்பு :**

வ. விஜயலெட்சுமி
பணிப்பாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்
செல்வி மாகிறித்தா வேதநாயகம்
சிரேஷ்ட ஆசிரியர், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு - 04
திருமதி. இ. ரதி தேவசுந்தரம்
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி ஆலுவலகம், கண்டி
செல்வி ஜே.பாலறஞ்சனி
மாகாணக் கல்வி அலுவலகம், மேல் மாகாணம்
திரு. வே. திருச்சபேசன்
ஆசிரியர் மத்திய நிலையம், தீவகக் கல்வி வலயம், வேலணை
ஜனாப். ஆர்.சதாத்
ஆசிரியர், தி / தாருல் உலும் ம.வி, கிண்ணியா
திரு. பொ. அசோக்குமார்
ஆசிரியர், வ / டலோஸ் த.ம.வி., உடப்புசல்லாவ, நுவரெலியா
திரு. சி. காண்டீபன்
அபிவிருத்தி உதவியாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**மொழிப்பதிப்பு :**

வ. விஜயலெட்சுமி
பணிப்பாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்

# ஆசிரியர் வழிகாட்டியைப்

# பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

2007 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் கலைத்திட்டத்தில் தொகுதிப் பாடங்களுள் ஒன்றாக இருந்துவரும் இரண்டாம் மொழி - தமிழ்ப் பாடம் 2015 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் அதேவிதமாக நடைமுறைப்படுத்தப்படும். 6-11 ஆந் தரங்களுக்காக வாரமொன்றுக்கு இரண்டு பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

6-11 ஆந்தரங்களுக்காக தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் படி பிரதானமாக கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்னும் நான்கு தேர்ச்சிகளின் கீழ் தரம் 6 க்கான இரண்டாம் மொழி - தமிழ்ப் பாடக் கலைத்திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியானது பாடத்திட்டம், பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

‘இரண்டாம் மொழி - தமிழ்’ பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும்போது பாடங்களும் அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. இவ் ஆசிரியர் வழிகாட்டியில் உள்ள **சொற்களஞ்சியம்** என்னும் பகுதி ஆசிரியர் தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை சிறப்பாக மேற்கொள்ள உதவியாக அமையும். இவ்வாறு செயற்பாடு சார்ந்த கற்றல் சந்தர்ப்பங்களைத் திட்டமிட்டு வழங்குவதன் மூலம் மாணவர் பாடங்களைப் பயில்வதற்கு வழிப்படுத்துவதே இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**நூல் ஆக்கக் குழு**

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|


| | | |
|---|---|---|
| 01. | பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| 02. | பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| 03. | அறிமுகம் | v |
| 04. | கலைத்திட்டக் குழு | vi |
| 05. | ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் | vii |
| 06. | பாடத்திட்டம் | viii |
| 07. | கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல் | |
| | 1.0 கேட்டல் | 01 - 14 |
| | 2.0 பேச்சு | 15 - 27 |
| | 3.0 வாசிப்பு | 28 - 35 |
| | 4.0 எழுத்து | 36 - 41 |

# பாடத்திட்டம்

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்கள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 திசெம்பர்)**

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தரும் வகையிலான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல். விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்ப வற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு - கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்

### 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

### 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு (சமூகம், உயிரியல், பௌதிகம்) தொடர்புறுகின்றன.

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

**5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும் நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

**6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்

**7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக, மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

# கேட்டல்

| தேர்ச்சி | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுகளைச் செவிமடுத்து அவற்றை இனங்கண்டு துலங்குவார். | 1.1 பண்பான உரையாடல்களைச் செவிமடுத்துத் துலங்குவார். | • பாடசாலை வகுப்பறையில் முதல் நாள் சந்திப்பு<br>உ-ம்: வணக்கம், எப்படி சுகம் | • விளங்குவதற்கு சுமுகமான பேச்சுக்களை அவதானமாகக் கேட்டுத் துலங்குவார். | 03 |
| | 1.2 அறிவுறுத்தல் - களுக்குச் செவிமடுத்துத் | • எனது குடும்பம்<br>- எளிமையான அறிவுறுத்தல்கள் | • விளங்குவதற்கு இலகுவான அறிவுறுத்தல்களைக் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். | 03 |
| | 1.3 வழிநடத்தல்களுக்குச் செவிமடுத்துத் துலங்குவார். | • ஆசிரியர் மாணவர் உரையாடல் | • மிகவும் இலகுவான தகவல்களைச் செவிமடுத்துத் துலங்குவார். | 03 |
| | 1.4 அறிவித்தல்களுக்குச் செவிமடுத்துத் துலங்குவார். | • பயணிகளுக்கான அறிவித்தல்கள்<br>உ-ம்: பஸ்நிலையம் | • மிக இலகுவான சுமுகமான பேச்சுகளைச் செவிமடுத்து அதற்கேற்பச் செயற்படுவார். | 03 |
| | 1.5 வானொலி, ஒலிநாடா ஒலிபரப்புகள் கதை, பாடல்ளைச் செவிமடுத்து இரசனையை வெளிக்காட்டுவார். | • இலகுவான கதை<br>- ஆமையும் முயலும்<br>• இலகுவான பாடல்<br>- நிலா நிலா | • இலகுவான தெளிவான ஒலிபரப்புகள் கதை, பாடல்ளைச் செவிமடுத்து இரசனையை வெளிக்காட்டுவார். | 03 |

## பேச்சு

| தேர்ச்சி | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 2.0 பொதுவான விடயங்கள் தொடர்பான வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவதற்கு முன்வந்து செயற்படுவார். | 2.1 அறிவுறுத்தல்களை விளங்கிச் செயற்படுவார். | • நண்பர்களுக்கு இடையிலான உரையாடல்<br><br>இலகுவான அறிவுறுத்தல்கள்:<br>• காலை உணவு | • மிக இலகுவான அறிவுறுத்தல்களை விளங்கித் துலங்குவார். | 04 |
| | 2.2 வழிநடத்தல்களைப் பின்பற்றி உரையாட முன்வருவார். | • பூங்காவிற்குச் செல்ல வழிகேட்கும் சந்தர்ப்பம் | • இலகுவான வழிநடத்தல்களை விளங்கி உரையாடுவார். | 04 |
| | 2.3 நட்புரீதியாக உரையாடுவதற்கு முன்வருவார். | • சுய அறிமுகம்<br>- நண்பருடன் உரையாடுதல் | • மிக இலகுவான வினாக்களை வினவி உரையாடுவார். | 04 |
| | 2.4 தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக உரையாடுவார். | • வீட்டில் நிகழும் சுமுகமான உரையாடல்<br>- தைப்பொங்கல் | • எண்ணங்களையும் கருத்துக்களையும் பரிமாறிக்கொள்வார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 2.5 கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்காக உரையாடுவார். | • பழக்கடையில் பழங்கள் வாங்குதல் - 1 | • கொடுக்கல் வாங்கல் சந்தர்ப்பங்களுக்கேற்ப உரையாடுவார். | 03 |
| | 2.6 சிறிய வாக்கியங் - களுடனான உரையாடல்களைக் கொண்ட நாடகங்களை நடிப்பதற்கு முன்வருவார். | • பழக்கடையில் பழங்கள் வாங்குதல் - 2 | • மிக இலகுவான பரிச்சயமான உரையாடல்களைப் பயன்படுத்தி, நாடகம் நடிப்பார். | 03 |

## வாசிப்பு

| தேர்ச்சி | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 3.0 நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான, அறிமுகமற்ற சொற்கள், சொற்றொடர்களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து வாசிப்பார். | 3.1 கடிதங்களையும் வேறு படிவங்களையும் பாடல்களையும் விளங்கி வாசிப்பார். | • இலகுவான சொற்கள் கொண்ட பாடல் (வேணும், வேணாம்) | • இலகுவான கடிதங்களில் வரும் முக்கிய விடயங்களை விளங்கி வாசிப்பார். | 03 |
| | 3.2 இலக்கியங்களை விளங்கி வாசிப்பார். | • காலைப்பாடல் காக்கா... காக்கா... | • பரிச்சயமான தலைப்புகளில் உள்ள முக்கிய விடயங்களை விளங்கி வாசிப்பார். | 03 |
| | 3.3 அறிவுறுத்தல்களை விளங்கி வாசிப்பார். | • இலகுவான அறிவுறுத்தல்கள்: காலை உணவு | • மிக இலகுவான அறிவுறுத்தல்களை விளங்கி வாசித்துத் துலங்குவார். | 03 |
| | 3.4 கட்புல, செவிப்புல சாதனங்கள் மூலம் தகவல்களைப் பார்த்து விளங்கி வாசிப்பார். | • படங்களுடன் கூடிய இலகுவான கதை: ஆமையும் முயலும் | • படத்திலுள்ள விடயங்களை கருத்துள்ள வகையில் தொடர்புபடுத்தி வாசிப்பார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 4.0 நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான, அறிமுகமற்ற சொற்கள், சொற்றொடர்களில் உள்ள முக்கியமான விடயங்களை எழுதுவார். | 4.1 விபரங்கள் உள்ளடங்கிய பந்திகளை எழுதுவார். | • சுய அறிமுகம் | • எழுத்துக்கள், சொற்களை இனங்கண்டு, உறுப்பமைய எழுதுவார்.<br>• பழக்கமான தலைப்புகளைக் கொண்டு இலகுவான சொற்களை எழுதுவார். | 04 |
| | 4.2 ஆக்கபூர்வமான பந்திகளை எழுதுவார். | • செல்லப்பிராணி | • சம்பவங்கள், சந்தர்ப்பங்கள் தொடர்பான இலகுவான தலைப்புகளின் கீழ் ஆக்கபூர்வமான தொடர்களை எழுதுவார். | 04 |

# கற்றல் - கற்பித்தற்

# செயன்முறைக்குரியவழிகாட்டல்

**தேர்ச்சி** : 1.0 நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுகளுக்குச் செவிமடுத்து அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் :** 1.1 பண்பான உரையாடல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்:** • முதல் நாள் சந்திப்பு

**பாடவேளை** : 03

### கற்றற் பேறுகள்:

- ஆசிரியர் உச்சரிப்பதை அவதானமாகக் கேட்பார்.
- விளங்குவதற்கு இலகுவான பேச்சுகளை அவதானமாகக் கேட்டுத் துலங்குவார்.
- புதிய சொற்களைக் கேட்பதில் விருப்புடன் ஈடுபடுவார்.
- புதிய சொற்களை இனங்கண்டு, நண்பர்களுடன் பேசுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- பாட நூலில், தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடத்திலுள்ள சொற்களை, ஆசிரியர் சரியான உச்சரிப்புடன் கூறும்போது, மாணவரை அவதானமாகக் கேட்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர், மீண்டும் மீண்டும் அவற்றைக் கேட்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு மாணவரும் தாம் கேட்டவற்றுக்குத் துலங்கலை வெளிக்காட்ட இடமளியுங்கள்.
- மாணவரைக் குழுவாக இயங்க வழிப்படுத்துங்கள்.
- ‘‘**வணக்கம், எப்படி சுகம்?**’’ என ஒரு குழுவினர் கேட்க, மற்றைய குழுவினர் அவதானமாகக் கேட்டு, பதிலுக்கு ‘‘**நான் நல்ல சுகம்**’’ எனக் கூற வழிப்படுத்துங்கள். இவ்வாறே, மற்றைய குழுவும் கேட்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் இடருறும்போது உதவி செய்து, அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

### முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்:

- வாழ்த்துச் சொற்களைப் பயன்படுத்தி உரையாடலை ஆரம்பித்தல்
  உ-ம்: வணக்கம்
- ‘‘எப்படிச் சுகம்?’’ எனக் கேட்டல்
- ‘‘நல்ல சுகம்’’, ‘‘நான் நல்ல சுகம்’’ எனப் பதில் கூறல்

### தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல் - இரண்டாம் மொழி தமிழ், தரம் - 6
- படங்களுடன் கூடிய சொற்கள்
- உரையாடலில் பயன்படுத்தக்கூடிய சொற்களின் பட்டியல்

### கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- உரையாடலை அவதானமாகச் செவிமடுப்பார்.
- இலகுவான சிறு வாக்கியங்களைப் பயன்படுத்தி உரையாடுவார்.
- உரையாடலை விளங்கி, கேட்கப்படும் வினாக்களுக்கு விடை கூறுவார்.
- சுகம் விசாரிப்பதற்காக உரையாடுவார்.

- **பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

வணக்கம்.
எப்படி சுகம்?
நான் நல்ல சுகம்.

நீங்கள்....................?
உங்கள் பெயர் என்ன?
எனது பெயர் சிவா.
என் பெயர் சிவா.

உங்கள் ஊர் ..................?
எனது ஊர் காலி.

உங்கள் ஊர் எது?
எனது ஊர் கண்டி.

மீண்டும் சந்திப்போம்.
நன்றி.

| | | |
|---|---|---|
| நான் | - | எனது |
| நாங்கள் | - | எங்கள் |
| நீங்கள் | - | உங்கள் |

என் / எனது / என்னுடைய
உனது / உங்கள் / உங்களுடைய

## சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| வணக்கம் | ආයුබෝවන් |
| எப்படி | කොහොම ද? |
| நான் | මම |
| நல்ல சுகம் | හොඳ සනීපයි |
| முதல் நாள் | පළමු දින / පළමු දිනය |
| சந்திப்பு | හමුවීම |

**தேர்ச்சி** : 1.0 நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுகளுக்குச் செவிமடுத்து, அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் :** 1.2 செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்:** • எனது குடும்பம்
**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்:**

- ஆசிரியர் கூறும் விடயங்களை அவதானமாகச் செவிமடுப்பார்.
- தனது குடும்பத்தினரை அறிமுகம் செய்து பேசுவார்.
- பொருத்தமான இடங்களில் உறவுப் பெயர்களைப் பயன்படுத்துவார்.
- குடும்பத்திலுள்ள எல்லோருக்கும் மதிப்பளிக்கப் பழகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாட நூலில், தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடத்திலுள்ள சொற்களை, ஆசிரியர் சரியான உச்சரிப்புடன் கூறும்போது, மாணவரை அவதானமாகக் கேட்க வழிப்படுத்துங்கள்.
- குடும்ப அங்கத்தவர்கள் / உறவுப் பெயர்களைக் குறிப்பிடுங்கள்.
  **உ-ம்:** அப்பா அம்மா அக்கா அண்ணா
  தம்பி தங்கை தாத்தா பாட்டி
- மாணவர், மீண்டும் மீண்டும் அவற்றைக் கேட்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு மாணவரும் தாம் கேட்டவற்றுக்கு ஏற்ப, துலங்க வழிகாட்டுங்கள்.
- குடும்ப அங்கத்தவர்களை அறிமுகம் செய்து கூறுங்கள்.
- மாணவர் ஒருவர் தனது குடும்ப அங்கத்தவர்களை அறிமுகம் செய்ய, ஏனைய மாணவர்கள் அவற்றை அவதானமாகக் கேட்டு, சரியான துலங்கலை வெளிக்காட்ட. வழிநடத்துங்கள். இவ்வாறே, எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் இடருறும்போது உதவி வழங்கி, அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்:**

**உ-ம்:**

என் அம்மா பெயர் கமலா
என் அப்பா பெயர் நாதன்
என் அக்கா பெயர் ரதி
என் அண்ணா பெயர் சிவா
என் தம்பி பெயர் கமால் / கமல்
என் தங்கை பெயர் மாலா / நாதியா

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல் இரண்டாம் மொழி தமிழ் - தரம் - 6
- இலகுவான சொற்கள் அடங்கிய அட்டைகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- ஆசிரியர் உச்சரிப்பதை அவதானமாகக் கேட்பார்.
- உறவுப் பெயர்களை உச்சரித்துக் கூறுவார்.
- புதிய சொற்களை இனங்கண்டு, நண்பர்களுடன் பேசுவார்.
- தமது குடும்ப அங்கத்தவர்களை அறிமுகம் செய்வார்.

- **பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

என் அம்மா பெயர் கமலா
என் அப்பா பெயர் நாதன்
என் அக்கா பெயர் ரதி
என் அண்ணா பெயர் சிவா
என் தம்பி பெயர் கமல்
என் தங்கை பெயர் மாலா

| | | |
|---|---|---|
| என் | - | எனது |
| நான் | - | என் / எனது / என்னுடைய |
| நீங்கள் | - | உங்கள் / உங்களுடைய |

### சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| என் / எனது / என்னுடைய | මගේ |
| அப்பா | තාත්තා |
| அம்மா | අම්මා |
| அண்ணா | අයියා |
| அக்கா | අක්කා |
| தம்பி | මල්ලි |
| தங்கை | නංගී |
| பாட்டன் / தாத்தா | සීයා |
| பாட்டி | ආච්චි |
| பெயர் | නම |

**தேர்ச்சி** : 1.0 நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுகளுக்குச் செவிமடுத்து அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் :** 1.2 அறிவுறுத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்:** • எளிமையான அறிவுறுத்தல்கள்

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்:**

- எளிமையான அறிவுறுத்தல்களைச் செவிமடுப்பார்.
- ஆசிரியர் உச்சரிப்பதை அவதானமாகக் கேட்டு, துலங்கலை வெளிக்காட்டுவார்.
- அறிவுறுத்தல்களைக் கேட்டு அதற்கேற்பச் செயற்படுவார்.
- புதிய சொற்களை இனங்கண்டு பயன்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாட நூலில், தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடத்திலுள்ள சொற்களை, ஆசிரியர் சரியான உச்சரிப்புடன் கூறும்போது, மாணவரை அவதானமாகக் கேட்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர், மீண்டும் மீண்டும் அவற்றைக் கேட்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு மாணவரும் தாம் கேட்ட அறிவுறுத்தலுக்கு ஏற்ப செயற்பட வழிகாட்டுங்கள்.
- மாணவரை, குழுவாக இயங்க வழிப்படுத்துங்கள்.
- ஒரு குழுவினர் அறிவுறுத்தல்கள் அடங்கிய அட்டையில் உள்ளவற்றைக் கூற, மற்றைய குழுவினர் அவதானமாகக் கேட்டு, சரியான துலங்கலை வெளிக்காட்ட உதவுங்கள். இவ்வாறே, மற்றைய குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் இடருறும்போது உதவி செய்து, அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்:**

- அங்கே • இங்கே
- சுத்தம் பேணுவோம் / பேணுங்கள்
- அமைதி பேணுவோம் / பேணுங்கள்
- தந்தை தாய் பேணுவோம்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல் இரண்டாம் மொழி தமிழ் - தரம் - 6
- இலகுவான அறிவுறுத்தல்கள் அடங்கிய அட்டைகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- ஆசிரியர் உச்சரிப்பதை அவதானமாகக் கேட்பார்.
- எளிமையான அறிவுறுத்தல்களைச் செவிமடுத்து துலங்குவார்.
- புதிய சொற்களை இனங்கண்டு, நண்பர்களுடன் பேசுவார்.
- பாடசாலையில் கூறப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நடப்பார்.

- **பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

- சுத்தம் பேணுவோம் / பேணுங்கள்
- அமைதி பேணுவோம் / பேணுங்கள்
- தந்தை தாய் பேணுவோம்
- சத்தம் போட வேண்டாம்

- இங்கே குப்பை போடவேண்டாம்
- அங்கே குப்பை போடுங்கள்
- அங்கே புத்தகங்களை வையுங்கள்

| | | |
|---|---|---|
| அங்கே | / | அங்கு |
| இங்கே | / | இங்கு |

**சொற்களஞ்சியம்**

| | |
|---|---|
| சுத்தம் | පිරිසිදුයි |
| அமைதி | නිහඬයි |
| பேணுவோம் | රකිමු |
| பேணுங்கள் | රකින්න |
| நீர் | ජලය |
| தந்தை | පියා |
| தாய் | මව |
| இங்கே | මෙහි |
| அங்கே | එහි |
| குப்பை | කුණු |
| போட வேண்டாம் | දාන්න එපා |
| போடுங்கள் | දාන්න |
| புத்தகங்கள் | පොත් |
| வையுங்கள் | තියන්න / තබන්න |
| சத்தம் | ශබ්ද |

**தேர்ச்சி** : 1.0 நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுகளுக்குச் செவிமடுத்து அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் :** 1.3 வழிநடத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்:** ஆசிரியர் - மாணவர் உரையாடல்:
- இலகுவான வழிநடத்தல்கள்

**பாடவேளை** : 03

## கற்றற் பேறுகள்:

- வழங்கப்பட்ட எளிமையான உரையாடலில் உள்ள வழிநடத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.
- தகவல்களுக்கு ஏற்ப, சரியான வழியைக் கண்டறிவார்.
- கேட்டவற்றை ஞாபகத்தில் வைத்திருந்து செயற்படுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- பாட நூலில், தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடத்திலுள்ள வழிநடத்தல்களை, ஆசிரியர் சரியான உச்சரிப்புடன் கூறும்போது, மாணவரை அவதானமாகக் கேட்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர், மீண்டும் மீண்டும் அவற்றைக் கேட்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு மாணவரும் தாம் கேட்டவற்றுக்குத் துலங்கலை வெளிக்காட்ட இடமளியுங்கள்.
- மாணவரை, குழுவாக இயங்க வழிப்படுத்துங்கள்.
- ஒரு குழுவினர் எளிமையான வழிநடத்தல்களைக் கூற, மற்றைய குழுவினர் அவதானமாகக் கேட்டு, தகவல்களுக்கு ஏற்ப சரியான வழியைக் கண்டறிய வழிப்படுத்துங்கள். இவ்வாறே, மற்றைய குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் இடருறும்போது உதவி, அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

## முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| பூங்கா | எங்கே | நேராக | வலது | இடது |
| பக்கம் | மேலே | கீழே | உள்ளே | வெளியே |
| செல்லுங்கள் | திரும்புங்கள் | அங்கே | இங்கே | |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாட நூல் இரண்டாம் மொழி தமிழ் - தரம் 6
- படத்துடன் கூடிய உரையாடல்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- பாடத்தில் உள்ள புதிய சொற்களைக் கேட்பதில் விருப்புடன் ஈடுபடுவார்.
- மற்றவர் கூறுவதைக் கிரகித்து அதற்கேற்ப துலங்குவார்.
- பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி உரையாடி, சரியான வழியைக் கண்டறிவார்.
- சரியான வழியைக் கண்டறிவதில் மகிழ்வுடன் ஈடுபடுவார்.

- **பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

| | |
|---|---|
| புத்தகம் எங்கே? | மேசைக்கு மேலே |
| குடை எங்கே? | அலுமாரிக்கு உள்ளே |
| பந்து எங்கே? | மேசைக்கு கீழே |

## சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| பூங்கா | මල් වත්ත |
| எங்கே? | කොහෙ ද ? |
| மேலே | උඩ |
| கீழே | යට |
| உள்ளே | ඇතුලේ |
| வெளியே | එළියේ |
| நேராக | කෙළින් |
| வலது | දකුණ |
| இடது | වම |
| பக்கம் | පැත්ත |
| செல்லுங்கள் | යන්න |
| திரும்புங்கள் | හැරෙන්න |
| மேசை | මේසය |
| மேசைக்கு | මේසේට |
| அலுமாரி | අල්මාරිය |
| அலுமாரிக்கு | අල්මාරියට |
| குடை | කුඩය |
| புத்தகம் | පොත |
| பந்து | බෝලය |

**தேர்ச்சி** : 1.0 நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுகளுக்குச் செவிமடுத்து அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் :** 1.4 அறிவித்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்:** • பயணிகளுக்கான அறிவித்தல்கள் - பஸ் நிலையம்

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்:**

- எளிமையான அறிவித்தலை அவதானமாகச் செவிமடுப்பார்.
- செவிமடுத்த அறிவித்தலில் உள்ள தகவல்களைக் கூறுவார்.
- செவிமடுத்த அறிவித்தலுக்கு ஏற்ப, செயற்படுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாட நூலில், தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடத்திலுள்ள சொற்களை, ஆசிரியர் சரியான உச்சரிப்புடன் கூறும்போது, மாணவரை அவதானமாகக் கேட்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர், மீண்டும் மீண்டும் அறிவித்தலைக் கேட்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு மாணவரும் தாம் கேட்ட அறிவித்தலுக்குத் துலங்கலை வெளிக்காட்ட இடமளியுங்கள்.
- மாணவரை, குழுவாக இயங்க வழிப்படுத்துங்கள்.
- ஒரு குழுவினர் பயணிகளுக்கான அறிவித்தலைக் கூற, மற்றைய குழுவினர் அவதானமாகக் கேட்டு, அறிவித்தலில் உள்ள தகவல்களைக் கூற இடமளியுங்கள். இவ்வாறே, மற்றைய குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் இடருறும்போது உதவி வழங்கி, அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்:**

| | | | | |
|---|---|---|---|---|
| இது | கொழும்பு | கண்டி | தனியார் | பஸ் நிலையம் |
| இப்போது | பிற்பகல் | புறப்படும் | பயணிகள் | நிறுத்தப்படும் |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாட நூல் இரண்டாம் மொழி தமிழ் - தரம் 6
- இலகுவான அறிவித்தல்கள் (பஸ் நிலையம்)
- எழுதுதாள், எழுதுகருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடத்தில் உள்ள புதிய சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- அறிவித்தலைச் செவிமடுத்து, துலங்குவார்.
- கேட்போருக்கு விளங்கும் வகையில் அறிவித்தல்களைக் கூறிக்காட்டுவார்.
- வெவ்வேறு நிகழ்வுகளின் போது அறிவித்தல் செய்வதில் ஈடுபடுவார்.

- **பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**பயணிகளின் கவனத்திற்கு**!

இது கொழும்பு தனியார் பஸ் நிலையம். கண்டிக்குச் செல்லும் பஸ் வண்டி இப்போது புறப்பட உள்ளது.

## சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| கொழும்பு | කොළඹ |
| கண்டி | මහනුවර |
| கண்டிக்கு | මහනුවරට |
| தனியார் | පෞද්ගලික |
| பஸ் வண்டி | බස් රථය |
| பஸ் நிலையம் | බස් නැවතුම්පල |
| பிற்பகல் | පස්වරු |
| மூன்று மணிக்கு | තුනට |
| இப்போது / இப்பொழுது | දැන් |
| புறப்படும் | පිටත්වේ |
| நிறுத்தப்படும் | නවත්වනු ලැබේ |
| பயணிகள் | මගින් |
| பயணிகளுக்கான | මගින් සඳහා |
| அறிவித்தல் | නිවේදනය |
| செவிமடுங்கள் | සවන්දෙන්න |

**தேர்ச்சி** : 1.0 நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுகளுக்குச் செவிமடுத்து, அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் :** 1.5 வானொலி, ஒலிநாடா ஒலிபரப்புகள் மற்றும் கதைகள், பாடல்களைச் செவிமடுத்து இரசிப்பார்.

**விடய உள்ளடக்கம்:**
- இலகுவான கதை
  - ஆமையும் முயலும்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்:**
- படத்தைப் பார்த்து அதற்குப் பொருந்தும் வகையில் கதையைக் கூறுவார்.
- இவ்வாறான கதைகளை விருப்பத்துடன் வாசிப்பார்.
- குரல் ஏற்ற இறக்கத்துடன் கதை கூறும் திறனை விருத்தி செய்து கொள்வார்.
- புதிய சொற்களை இனங்கண்டு, நண்பர்களுடன் பேசுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**
- பாட நூலில், தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடத்திலுள்ள கதையை, சரியான உச்சரிப்புடன் கூறி, மாணவரை அவதானமாகக் கேட்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர், மீண்டும் மீண்டும் அவற்றைக் கேட்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு மாணவரும் தாம் கேட்ட கதையைக் கூறுவதற்கு இடமளியுங்கள்.
- ஆளுக்கொரு தொடராகக் கூறிக் கதையைத் தொடர வழிகாட்டுங்கள்.
- மாணவர் இடருறும்போது உதவி செய்து, அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்:**

| | | | |
|---|---|---|---|
| வேகமாக | மெதுவாக | முயல் | ஆமை |
| நித்திரை | போட்டி | ஓட்டப்போட்டி | திரும்பி |
| வெற்றி | அழைக்கிறது | ஆரம்பமாகிறது | ஓடுகிறது |
| பார்க்கிறது | வருகிறது | செய்கிறது | அடைகிறது |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- பாடநூல் இரண்டாம் மொழி தமிழ் - தரம் 6
- ஆமையும் முயலும் கதைக்குப் பொருத்தமான படங்கள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**
- சரியான உச்சரிப்புடன் கதை கூறுவார்.
- நடிப்போடு கதையைக் கூறுவதில் ஆர்வம் காட்டுவார்.
- கதையை நாடகமாக நடித்துக் காட்டுவார்.
- சிறு வினாக்களுக்கு விடையளிப்பதன் மூலம் கதையை ஞாபகப்படுத்திக் கூறுவார்.

- **பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

ஆமை **வேகமாக** ஓடுகிறது

ஆமை **மெதுவாக** ஓடுகிறது

முயல் **வேகமாக** ஓடுகிறது

முயல் **மெதுவாக** ஓடுகிறது

## சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| முயல் | හාවා |
| ஆமை | ඉබ්බා |
| நித்திரை | නින්ද |
| போட்டி | තරඟ |
| ஓட்டப்போட்டி | දිවීමේ තරඟ |
| திரும்பி | හැරී |
| வெற்றி | ජයග්‍රහනය |
| வேகமாக | වේගයෙන් |
| மெதுவாக | සෙමින් |
| அழைக்கிறது | අඬගහනවා |
| ஆரம்பமாகிறது | ආරම්භවේ |
| ஓடுகிறது | දුවනවා |
| பார்க்கிறது | බලනවා |
| வருகிறது | එනවා |
| செய்கிறது | කරනවා |
| அடைகிறது | ලඟාවෙනවා |

**தேர்ச்சி** : 1.0 நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுகளுக்குச் செவிமடுத்து, அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் :** 1.5 வானொலி, ஒலிநாடா ஒலிபரப்புகள் மற்றும் கதைகள், பாடல்களைச் செவிமடுத்து இரசிப்பார்.

